# விருந்தோம்பல்

வளர்நிலை 5

தமிழர்கள் பல பண்பாடுகளை உலகிற்கு அறிமுகம் செய்தார்கள். அவற்றில் ஒன்று. விருந்தோம்பல் வீட்டுக்கு வருவோரை முகம் மலர வரவேற்று அமரச் செய்து தாகம் தீர்த்து பசித்தோர்க்கு உணவு அளித்து அவர்கள் உள்ளம் குளிர உபசரிப்பவர்கள் தமிழர்கள்.

"அறம் எனப்படுவது
மண் உயிர்க்கு எல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும்
அன்பாகக் கொடுப்பது"

எனச் சொல்கிறது ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை.

அதாவது அறம் என்று சொல்லப்படுவது உலகில் உள்ள உயிர்களுக்கு உணவும் உடையும் இருப்பிடமும் அளித்தல் ஆகும்.

பண்டைய காலத்தில் வீட்டுக்கு முன் திண்ணை அமைத்து பானைகளில் தண்ணீர் வைத்து களைத்து வருவோர்க்கு இளைப்பாற வசதி செய்து கொடுத்தனர் நம் முன்னோர்கள். இதையே

¨உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே¨

எனக் கூறுகிறது புறநானூறு.

ஆனால் இன்று வீட்டுக்கு வரும் விருந்தினரை எப்படி உபசரிப்பது என்று அறியாத பலர் உள்ளனர். சிறிய தொகை உணவாயினும் அதை பகிர்ந்து உண்ணப் பழக்க வேண்டும்.

நம் இளந் தலைமுறையினர்க்கு வீட்டுக்கு வருவோரை அன்புடன் உபசரிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். இதன் மூலம் பண்பான சமுதாயத்தை நாம் உருவாக்க முடியும்.

¨பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை¨

நன்றி, வணக்கம்!